## **O.S.No.178/2016**

## **Date:09.01.2019**

**வாதி தரப்பு சாட்சி 2 - பொன்னுச்சாமி, த-பெ. காஞ்சிவனம் கோனார்**

சாட்சி இன்று மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

இந்த வழக்கு யார், எதற்காக, யார் மீது தாக்கல் செய்துள்ளது என்றால் அய்யாவு தாக்கல் செய்துள்ளார். சொத்துக்காக வழக்கு தாக்கல் செய்துள்ளார். என்ன சொல்லி தாக்கல் செய்துள்ளார் என்று வழக்குரையை படித்துப் பார்த்தேனா என்றால் படித்துப் பார்க்கவில்லை. நான் வாதி மந்தக்காளைக்கு ஆதரவாக சாட்சி சொல்ல வந்துள்ளேன் என்றால் சரிதான். அவர் அய்யாவுவின் சகோதரர் என்றால் சரிதான். அவர் வழக்குரையை படித்துக் காண்பித்தாரா என்றால் இல்லை. 2ம் பிரதிவாதி, மந்தைக்காளைக்கு மூத்த சகோதரி என்றால் சரிதான். அவரது கணவர் பெயர் கோபால் என்றால் சரிதான். அவர் நீதிமன்றத்திற்கு வந்துள்ளார் என்றால் சரிதான். என் மனைவி உயிருடன் இல்லை என்றால் சரிதான். நான், நாகரெத்தினம், கோபால் ஆகியோர் வீட்டில் வேலைக்காரராக பணிபுரிகிறேன். என்றால் சரியல்ல. அவர்கள் சொல்லித்தான் இந்த நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்து பொய்யாக சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் என் நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளது பொய்யானது என்றாலும், ஒரே இனத்தைச் சேர்ந்தவர்கள் என்பதை தவிர்த்து நாங்கள் உறவுக்காரர்கள் கிடையாது என்றால் சரியல்ல. மந்தைக்காளையின் அப்பாவும், என் அப்பாவும் உடன் பிறந்தவர்கள் ஆவார்கள். ஊமச்சிகுளம் காவல் நிலையத்தில் விசாரித்தார்கள். விசாரணைக்கு நான் போகவில்லை. அய்யாவு பெயரில் சொத்துக்கள் வாங்கப்பட்டுள்ளது தெரியுமா என்றால் தெரியும். அந்த சொத்துக்கள் அவரது சுய சம்பாத்திய சொத்துக்கள் என்றால் சரியல்ல. கூட்டுக் குடும்பச் சொத்துக்கள் ஆகும். மந்தைக்காளையே அவரது அண்ணன் பெயரில் உள்ள சொத்துக்கள் அவரது அண்ணன் சொத்துக்கள் என்று சாட்சியமளித்துள்ள தநிலையில், நான் மிகைப்படுத்தி சாட்சியம் பொய்யாகச் சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கு வழக்கு பற்றி எந்த விபரமும் கிடையாது என்றால் சரியல்ல. 31.07.1991ம் தேதியிட்ட ஆவணத்தில் கடைசியாக பாகப்பிரிவினை பத்திரம் பதிந்து கொள்ள வேண்டியது என்று முடிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். இந்த பாகப் பிரிவினைக்குப் பின்னர் தான் முறையாக சொத்துக்களை அடைந்து கொள்ள வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் நாளது தேதி வரை சகோதரர்கள் பாகப்பிரிவினை செய்து கொள்ளவில்லை என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தின்படி சகோதரர்கள் நடந்து கொள்ளவில்லை என்றால் சரிதான். நான் பொய்யாக சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

(2ம் பிரதிவாதி தரப்பில் மேற்படி குறுக்கு விசாரணை ஏற்றுக் கொள்ளப்படுகிறது.)